இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 01-04-2025

# ஆதித்யநாத் பேசலாமா?

தமிழ்நாடு முதலமைச்சர் மொழியால் பிரிவினைவாதம் செய்கிறாராம் சொல்கிறார் உ.பி. முதலமைச்சர் ஆதித்யநாத். வாயைத் திறந்தால் மக்களைப் பிரிவினைப்படுத்தும் சொல்லையே பேசி, செயல் செய்தால் பிரிவினைச் செயல்களையே செய்யும் ஆதித்யநாத், ‘பிரிவினை’ பற்றி எல்லாம் பேசலாமா? அதற்கான தகுதி அவருக்கு இருக்கிறதா?

**அவர் முதலமைச்சர் ஆவதற்கு முன்னால் அவர் மீது வைக்கப்பட்ட ‘கலவரத்தை தூண்டினார்’ என்ற குற்றச்சாட்டை வைத்து, அவருக்கு அதுவரை தரப்பட்டு இருந்த இசட் பிரிவு பாதுகாப்பு ரத்து செய்யப்பட்டது. அத்தகையவர்தான் இன்று இந்தியாவுக்கு அறிவுரை சொல்லும் இடத்துக்கு வந்திருக்கிறார். அவர் மீது எத்தனை விதமான வழக்குகள் இருக்கிறது என்பதை அவரே சொல்லட்டும். அல்லது, ‘என் மீது எந்த. வழக்கும் இல்லை’ என்று சொல்லும் தைரியம் அவருக்கு உண்டா?**

‘அவர்கள் ஒரு இந்துவை எடுத்துக் கொண்டால், நாங்கள் நூறு முஸ்லீமை எடுத்துக் கொள்வோம்’ என்று பேசிய சைவ பட்சி இவர். மதச் சிறுபான்மையினரை அச்சுறுத்துவதன் மூலமாக ஒட்டுமொத்த மக்கள் அனைவர் மனதிலும் பீதியைக் கிளப்பியவர் அவர்தான்.

“நூறு இந்துக் குடும்பங்களுக்கு மத்தியில் ஒரு முஸ்லிம் குடும்பம் பாதுகாப்பாக உணரும். ஆனால் 100 முஸ்லிம் குடும்பங்களுக்கு மத்தியில் 50 இந்து குடும்பங்கள் பாதுகாப்பாக இருக்காது” என்று சமீபத்தில் பேட்டி அளித்தவர் தான் இவர். எந்தத் தரப்பாக இருந்தாலும் அந்தத் தரப்புக்கு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது முதலமைச்சரான அவர்தானே!

பேச்சுச் சுதந்திரத்தை பிறப்புரிமையாகக் கொள்ளக் கூடாது என்று சொல்லி இருப்பவரும் அவர்தான். அதே பேச்சுச் சுதந்திரத்தை வைத்து கடந்த காலங்களில் அவர் பேசிய பேச்சுகள் அனைத்தும் குற்ற வழக்குகளுக்கு தகுதி உடையவை அல்லவா?

தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க அவர்கள் மீது வழக்குகள் போட்டு, அவர்களது வீடுகளை இடிப்பதையே சட்டபூர்வமாகச் செய்து வந்தார் ஆதித்யநாத். இதே பாணியை பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேசமும், குஜராத்தும், அரியானாவும் பின்பற்றியது. இந்தியாவில் புதிய பாணியை புகுத்தியவர் அவர்.

அவர் ஆட்சி நடத்தும் லட்சணம்தான் இந்தியாவே பார்த்துச் சிரித்ததே. ‘எங்கள் மாநிலத்தில் கொரோனாவில் யாருமே இறக்கவில்லை’ என்று சொன்னவர் ஆச்சே அவர்? ‘இதற்கு என்ன ஆதாரம்?’ என்று கேட்டால், ‘கொரோனா பற்றிய எந்தக் கணக்கெடுப்பையும் எடுக்க வேண்டாம்’ என்று சொல்லி விட்டவர் அவர்.

உத்தரப்பிரதேச மாநில இளைஞர் நாடாளுமன்ற விழாவில் உரையாற்றிய ஆதித்யநாத், “ஜனநாயகத்தின் மூன்று தூண்களான சட்டப்பேரவை, நிர்வாகம், நீதித்துறை ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து செயல்படும் போது தான் நல்லாட்சி நிகழ்கிறது. மூவரும் இணைந்து செயல்படும் போது தான் அது நல்லாட்சியின் இலக்கை அடைய உதவுகிறது. நாட்டின் ஒட்டுமொத்த அமைப்பும் இந்த மூன்று தூண்களால் இயக்கப்படுகிறது” என்று குறிப்பிட்டார். உடனே அதற்காக பின்னூட்டம் இட்ட, அந்த மாநில மக்கள், ‘நீங்கள் நடத்துவது நல்லாட்சியா?’ என்று கேட்டிருக்கிறார்கள்.

**‘இந்தியாவிலேயே அதிகளவிலான குற்ற வழக்குகள் பதிவாகும் மாநிலம் உ.பி.தான். 2022 ஆம் ஆண்டில் இந்தியா முழுக்க பதிவான 35 லட்சம் குற்ற வழக்குகளில் 4 லட்சம் வழக்குகள் உத்திரப் பிரதேசத்தில் பதிவானவை. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 65,743” என்று சமூக வலைதளங்களில் பதிவிட்டு, ஆதித்யநாத் நடத்தும் ஆட்சியின் லட்சணத்தை அவரது மாநிலத்தைச் சார்ந்தவர்களே அம்பலப்படுத்தி வருகிறார்கள்.**

கும்பமேளாவின் போது ஒரு படகோட்டி ரூ.30 கோடி சம்பாதித்ததாக உ.பி. சட்டமன்றத்தில் ஆதித்யநாத் சொன்னார். அவர் சொன்ன படகோட்டி மீது பல்வேறு குற்ற வழக்குகள் இருக்கிறது. மஹ்ரா என்ற படகோட்டி மீது கொலை, கொலை முயற்சி, கலவரம், துன்புறுத்தல், மிரட்டி பணம் பறித்தல் ஆகிய வழக்குகள் இருப்பதாக உ.பி. காங்கிரஸ் தலைவர் சுப்ரியா ஷ்ரினேட் பேட்டி அளித்துள்ளார்.

பா.ஜ.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அவரது ஆட்சியின் மீது குறை சொல்லி வருகிறார்கள். அவரது அமைச்சரவையில் அமைச்சராக இருக்கும் ஆஷிஷ் படேல், லோனி சட்டமன்ற உறுப்பினர் நந்த் கிஷோர், பதேஹி சட்டமன்ற உறுப்பினர் தீனாநாத் பாஸ்கர், லக்கிம்பூர் கேரியின் சட்டமன்ற உறுப்பினர் .. என்று பலரும் உ.பி. ஆட்சியை விமர்சித்து வருகிறார்கள்.

**“தொழில்நுட்பக் கல்வித் துறையில் ஊழல் நடக்கிறது. இது தொடர்பாக எந்த விசாரணை வைத்தாலும் அதில் நான் வந்து சொல்லத் தயாராக இருக்கிறேன்” என்று அமைச்சர் ஆஷிஷ் படேல், பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்துள்ளார். “காவல் நிலையங்கள் ஊழல் நடக்கும் கூடங்களாக மாறிவிட்டன” என்று பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான நந்த் கிஷோர் சொல்லி இருக்கிறார். ‘லஞ்சம் கொடுக்கவில்லை என்பதற்காக ஒருவரை குண்டர் சட்டத்தில் கைது செய்துள்ளார்கள்’ என்று பா.ஜ.க. எம்.எல்.ஏ. தீனாநாத் பாஸ்கர் பேட்டி அளித்துள்ளார். பணம் கேட்டவர் எந்த அதிகாரி என்பதையும் இவர் சொல்லி இருக்கிறார். இதை வைத்து பி.பி.சி. நிறுவனம் பல்வேறு பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களிடம் பேட்டி எடுத்துள்ளது. மூன்று பா.ஜ.க. உறுப்பினர்கள் இதனை உறுதி செய்துள்ளதாக அந்த நிருபர் எழுதி இருக்கிறார்.**

கோடிக்கணக்கான மக்கள் கூடிய விழா என்று சொல்லப்படும் கும்பமேளாவில், எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்ற கணக்கே இல்லை. இதுதான் ஆதித்யநாத் ஆட்சி.

உத்தரப்பிரதேசத்தில் போலே பாபா என்ற சாமியார் சொற்பொழிவை கேட்க வந்தவர்கள் கூட்ட நெரிசலில் சிக்கினார்கள்.. 121 பேர் மரணம் அடைந்தார்கள். அப்போது எந்த பாதுகாப்பு ஏற்பாடும் செய்யாதவர்தான் ஆதித்யநாத். ஒப்புக்கு ஆறு பேரை கைது செய்துவிட்டு, போலே பாபாவை விட்டுவிட்டதுதான் பா.ஜ.க. அரசு. போலே பாபா மீது பல்வேறு வழக்குகள் இருக்கிறது. பா.ஜ.க. ஆட்சி எப்படி கொடூரமாக இருக்கும் என்பதற்கு உதாரணம் உ.பி. ஆதித்யநாத் அரசு ஆகும்.

**நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 80 இடங்களில் 33 இடங்களை மட்டுமே வென்றவர் ஆதித்யநாத். அந்த மாநிலத்து மக்களிடம் எத்தகைய வெறுப்பை அவர் வாங்கி வைத்துள்ளார் என்பது இதில் இருந்து தெரிகிறது. எனவே தமிழ்நாடு முதலமைச்சருக்கு அவர் அறிவுரை சொல்ல வரத் தேவையில்லை.**



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாள் வாழ்த்தரங்கம் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் கழக விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் அணியின் செயலாளர் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் நடைபெற்றது. அமைச்சர் கே.என். நேரு தலைமையில் அமைச்சர்கள் க.பொன்முடி, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், எஸ்.எஸ். சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இவ்வாழ்த்தரங்கை எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. துவக்கி வைத்தார். அருண் நேரு எம்.பி. குத்துவிளக்கு ஏற்றி வைத்தார். கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், கழகத்தினர் திரளாகப் பங்கேற்றனர்.

### அமைச்சர் கே.என்.நேரு தலைமை! அமைச்சர்கள் க.பொன்முடி – எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் - எஸ்.எஸ்.சிவசங்கர் - மாவட்டச் செயலாளர்கள் முன்னிலை!

## முதல்வர் பிறந்தநாள்: திருச்சியில் கழக விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் வாழ்த்தரங்கம்!

### எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. துவக்கி வைத்தார்! வாழ்த்தரங்கத் தலைமை - கவிச்சுடர் கவிதைப்பித்தன்! அன்னியூர் அ.சிவா எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் நிகழ்ச்சி!

திருச்சி, ஏப். 1-

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் திராவிட நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சிறப்பு கவிதை வாழ்த்தரங்கம் 30.3.2025 - ஞாயிற்றுக்கிழமை அன்று, கலைஞர் அறிவாலயம், திருச்சியில் நடைபெற்றது.

விழாவிற்கு கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு தலைமை வகித்தார்.

அமைச்சர் முனைவர் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் காடு வெட்டி ந.தியாகராசன், மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமுணி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர்பொன். கௌதம சிகாமணி, திருச்சி மேயர் மு.அன்பழகன், திருச்சி மாநகர செயலாளர் மு.மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக விவசாய தொழிலாளர் அணிச்செயலாளர் அன்னியூர் அ.சிவா அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இவ்விழாவில் அருண் நேரு எம்.பி. குத்துவிளக்கு ஏற்றி வைத்தார்.

வாழும் சரித்திரம் அவருக்கு வண்ணக் கவிச்சரம்” என்ற தலைப்பில் நடைபெற்ற வாழ்த்தரங்கை கழக கொள்கை பரப்புச் செயலாளர் - கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைத்தார்.

கவியரங்கத்திற்கு கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமை வகித்தார். ‘கலைஞரின் வார்ப்பு’- என்ற தலைப்பில் நெல்லை ஜெயந்தாவும், திராவிடர் சிறப்பு என்ற தலைப்பில் கவிஞர் தஞ்சை இனியனும், இந்தியாவின் எதிர்ப்பார்ப்பு என்ற தலைப்பில் கவிஞர் இரா.தனிக்கொடியும், உழைப்பின் பிறப்பு என்ற தலைப்பில் கவிஞர் மகாலட்சுமியும் வாதிட்டனர். விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் நன்றி கூறினார்.

இவ்விழாவில் கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர்கள் பி.என்.பி. இன்பசேகரன், த.சந்திரசேகரன், இணைச் செயலாளர்கள் சி.ஆர்.இராமச்சந்திரன், ஜெகவீரபாண்டியன், ப.கைலாசம், துணைச் செயலாளர்கள் வ.அன்பழகன், பா.அருண்குமார், இரா.சங்கர், பி.பாக்கியநாதன், கு.தெ.முத்து, சா. ராஜசேகரன், எஸ்.சேதுராமன், கொடி சந்திரசேகர், ர.முத்துக்குமாரசாமி, கே. ஆர்.என்.போஸ், வ.து.ரு. ஆனந்தன், கே.கணேஷ் குமார் ஆதித்தன் உள்பட கழக முன்னணியினர், தோழர்கள் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

விழாவிற்கு வருகை தந்தவர்களை வரவேற்று திருச்சி மாவட்ட அமைப்பாளர்கள் எம்.ஏ.துரை பாண்டியன், ஆ.ஜெகதீசன் ஆகியோர் உபசரித்தனர்.

### கொளத்தூரில் முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட

## பெரியார் அரசு மருத்துவமனை செயல்பாடுகள் குறித்து ஆய்வு!

### அமைச்சர் எ.வ.வேலு மேற்கொண்டு - நோயாளிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்!

சென்னை, ஏப். 1 –

சென்னை கொளத்தூரில் உள்ள பெரியார் நகரில் கடந்த மாதம் பிப்ரவரி 27 ஆம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட பெரியார் அரசு மருத்துவமனையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

உடன் அமைச்சர் சேகர்பாபு மற்றும் மேயர் பிரியா உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் இருந்தனர்.

கொளத்தூர் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதி மக்களுக்கு தரமான உயர் மருத்துவ சிகிச்சைகளை வழங்க பெரியார் நகரில் கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் தேதி தரை மற்றும் 3 தளங்களுடன் கூடிய புதிய மருத்துவமனையைக் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது.

அதனை அடுத்து மேலும் சில சிறப்பு சிகிச்சைகளை வழங்குவதற்கான கூடுதலாக 3 தளங்களுடன் விரிவாக்கம் செய்ய கடந்தாண்டு மார்ச் 7 தேதி அடிக்கல் நாட்டப்பட்டது. மொத்தம் 6 தளங்களோடு பல்வேறு புதிய உயர் சிகிச்சை வசதிகளுடன் 210.80 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு இந்த மருத்துவ மனைக்கு பெரியார் அரசு மருத்துவமனை என பெயர் சூட்டி கடந்த மாதம் பிப்ரவரி 27 ஆம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த மருத்துவமனையை திறந்து வைத்தார்.

இந்நிலையில் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறைகள் பற்றியும், மருத்துவமனை செயல்பாடுகளையும் அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்கள் மற்றும் நோயாளிகளிடம் கருத்துகளை கேட்டறிந்தார்.

பெரியார் அரசு மருத்துமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நோயாளிகளிடம் உங்களை நல்லா பார்த்துக்கொள்கிறார்களா எனவும் மூன்று வேலையும் உணவு சரியாக வருகிறதா எனவும் சரியாக வார்டுகளை தூய்மை பணிகளை மேற்கொள்கிறார்களா எனவும் அமைச்சர் எ.வ.வேலு கேட்டறிந்தார். தொடர்ந்து மருத்துவமனை ஆய்வகங்கள் மற்றும் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு உள்ளிட்ட வார்டுகளுக்கும் சென்று நோயாளிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:–

கொளத்தூர் பெரியார் நகரில் அமைந்துள்ள பெரியார் மருத்துவமனை முதலமைச்சர் திறந்து வைத்த மறு தினமே மருத்துவமனை மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. பொதுப்பணித்துறை சார்பாக பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு இருக்கிறது. உரிய நேரத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெறுகிறதா பொறியாளர்கள் வருகிறார்களா என ஆய்வு செய்வதற்காக அமைச்சர் சேகர்பாபு உடன் இணைந்து ஆய்விற்கு வந்துள்ளோம்.

மருத்துவமனைக்கு அரசு விடுமுறை நாள் கிடையாது. சிறப்பு மருத்துவமனையில் 560 படுக்கைகளை கொண்ட மருத்துவமனை உள்ளது. பழைய கட்டிடத்தில் 300 படுக்கைகள் உள்ளது என மொத்தமாக 870 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

புதிய மருத்துவமனையில் 25க்கு மேற்பட்ட மருத்துவ துறைகள் செயல்பட்டு வருகிறது.

நியூராலஜி, ஆர்த்தோ, கார்டியாலஜி சிறப்பு துறைகளில் சோதனைகளும் பரிசோதனைகளும் நடைபெற்று வருகிறது.ஒரு நாளில் 125க்கும் மேற்பட்ட நோயாளிகள் மார்பக பிரச்சினைகள் வருகிறார்கள் என தெரிவித்தார்.

மொத்தமாக 639 பேர் பணியாற்றி வருகிறார்கள். அதில் 90% பேர் பணியில் உள்ளார்கள். மீதமுள்ள 10 சதவீதம் வந்து கொண்டிருக்கிறார்கள் என மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த மருத்துவமனையில் ஏற்கனவே நான்கு ஆபரேஷன் தியேட்டர் உள்ளது. இந்த கட்டிடத்தில் மேலும் ஆறு ஆப்ரேஷன் தியேட்டர் உள்ளது. மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மருத்துவனைகளிலே 9 ஆபரேஷன் தியேட்டர் தான் உள்ளது. ஆனால் மருத்துவக் கல்லூரியில் இல்லாத மருத்துவ மனையில் 10 ஆபரேஷன் தியேட்டர் உள்ளது என தெரிவித்தார்.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு ஒரே ஆப்ரேஷன் தியேட்டர் உள்ளது. கிட்னி எடுப்பது கிட்னி பொருத்த என இரண்டுக்கும் ஒரே ஆபரேஷன் தியேட்டர் உள்ளது. வட பகுதியில் உள்ள மக்கள் மருத்துவம் பார்ப்பதற்காக இந்த மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் என் துறை சார்பாக சில நேரம் அவரே ஆய்வுகளை நடத்திக் கொள்கிறார் என கூறினார்.

பெரியார் பெயரில் அமைந்துள்ள மருத்துவமனை கொளத்தூர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினரான முதலமைச்சர் பார்த்து பார்த்து கட்டி உள்ளார். நேரடியாக வார்டு சென்று நோயாளிகளிடம் கேட்டபோது முகம் பூரித்து சிறப்பாக பார்த்துக் கொள்கிறார்கள் எனவும் முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என என்னிடம் சொல்லி உள்ளார்கள். முதலமைச்சரிடம் தொகுதி மக்கள் உங்களுக்கு நன்றி சொன்னார்கள் என தெரிவிக்க உள்ளேன் என தெரிவித்தார்.

தமிழகத்தில் சுங்கச்சாவடி கட்டணம் உயர்வு குறித்தான கேள்விக்கு,

நாளைக்கு சட்டமன்றம் இருக்கிறது. அங்கு பேசுகிறேன் எனவும் எனக்கு நாளைக்கே துறை மீதான மானியம் இருக்கிறது. அதில் நான் பேசுகிறேன் எனவும் அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (31.3.2025) சென்னை, கொளத்தூர், பெரியார் அரசு உயர் சிறப்பு மருத்துவமனையில் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் மருத்துவச் சிகிச்சைகளுக்கான அடிப்படை வசதிகள், மருத்துவமனை வளாக மேம்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, அமைச்சர் பி.கே.சேகர்பாபு மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, ஜெ.ஜெயகாந்தன், எஸ்.மணிகண்டன், திருமதி.பிரேமலதா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.